|b09291 41eyrinF (English)

|c09291_000_41eyrin.xml (Task 178178)

|v1

ஞாயிறு காலைக் கூட்டம்

|v2

பொது மாநாடு

|v3

ஞாயிறு காலைக் கூட்டம்

|v4

அக்டோபர் 3, 2010

|v5

தேவனில் நம்பிக்கைகொள், பின்னர் போய் செயல்படு

|v6

நம்பிக்கை

|v7

கீழ்ப்படிதல்

|v8

தீர்க்கதரிசிகள்

|v9

ஆசீர்வாதங்கள்

|v10

பொது மாநாடு

|v11

தேவனில் நம்பிக்கைகொள், பின்னர் போய் செயல்படு

|v12

தலைவர் ஹென்ற்றி பி. ஐரிங்

|v13

பிரதான தலைமையின் முதல் ஆலோசகர்

|v14

கற்றுக்கொள்ளும், மனந்திரும்பும் எண்ணத்தோடு நீங்கள் கேட்கும்போது அவரில் உங்கள் நம்பிக்கையைக் காட்டுகிறீர்கள், பின்னர் நீங்கள் போய் அவர் கேட்கிறதை செய்கிறீர்கள்.

|v15

எனது அன்புமிக்க சகோதர சகோதரிகளே, இந்த ஓய்வுநாளில் உங்களிடம் பேசுவதை கௌரவமாக கருதுகிறேன். இலட்சக்கணக்கான பிற்காலப் பரிசுத்தவான்களுடனும், உலகத்தைச் சுற்றியுள்ள நமது நண்பர்களுடனும் பேசக் கொடுக்கப்பட்ட இந்த பொறுப்பினால் நான் தாழ்மையடைகிறேன். இந்த பரிசுத்த சிலாக்கியத்திற்கான ஆயத்தத்தில், உங்கள் சொந்த தேவைகளைப்பற்றியும் என்ன செய்தியை நான் கொடுக்க கர்த்தர் விரும்புகிறார் என்பதைப்பற்றியும் நான் ஜெபித்து தியானித்தேன் .

|v16

உங்கள் தேவைகள் பெரிதானதும் வெவ்வேறானதுமாயிருக்கிறது. நீங்கள் ஒவ்வொருவரும் தேவனின் தனித்துவமான பிள்ளை. உங்கள் ஒவ்வொருவரையும் தனிப்பட்டவர்களாக அவர் அறிவார். உங்களுக்கும் உங்கள் தேவைகளுக்கும் பொருத்தமான ஊக்கப்படுத்துதலின், சரிப்படுத்துதலின், வழிகாட்டுதலின் செய்திகளை அவர் அனுப்புகிறார்.

|v17

இந்த மாநாட்டின்போது நான் என்ன பேசவேண்டுமென தேவன் விரும்புகிறாரென்பதைக் கண்டுபிடிக்க, வேதங்களிலும் கடந்த மாநாட்டிலுமுள்ள அவரது ஊழியக்காரர்களின் செய்திகளை நான் படித்தேன். மார்மன் புத்தகத்தின் ஒரு மகத்தான ஊழியக்காரனான ஆல்மாவின் வார்த்தைகளை நான் படித்தபோது எனது ஜெபத்திற்கு ஒரு பதில் எனக்குக் கிடைத்தது.

|v18

*“ஓ நான் தூதனாயிருந்து என் இருதயத்தின் வாஞ்சையின்படியே புறப்பட்டுப்
போய் தேவ எக்காளத்தோடு பூமியை அதிரப்பண்ணுகிற சத்தத்தால் மனந்திரு
ம்புதலை எல்லா ஜனங்களுக்கும் அறிவிக்கிறது எவ்வளவு இன்பமாயிருக்கும்!*

|v19

*“ஆம், பூமியின் பரப்பின் மேலெங்கும் துக்கம் இன்னும் அதிகமாய் இராதபடி
க்கு ஒவ்வொரு ஆத்துமாவும் மனந்திரும்பி, தேவனிடத்தில் வரும்படியாக அ
வைகளிடத்தில் மனந்திரும்புதலையும் மீட்பின் திட்டத்தையும் இடிமுழக்கத்தி
ன் சத்தம்போல் அறிவிப்பேன்.*

|v20

*“இதோ நான் ஒரு மனுஷன், நான் விரும்பியே பாவஞ் செய்கிறேன்; கர்த்தர் எ
னக்கு அருளிய காரியங்களில் நான் மனரம்மியமாய் இருக்கவேண்டும்”1.*

|v21

*பின்னர் நான் ஜெபித்துக்கொண்டிருக்கிற வழிநடத்துதலை ஆல்மாவின் சிந்த
னையில் நான் கண்டேன்: “எப்படியெனில், இதோ கர்த்தர் சகல தேசங்களுக்
கும் தேவையென்று தாம் பொருத்தமாய் காண்கிற யாவையும் அவர்களுடைய
சொந்த தேசத்தின்படியேயும், பாஷையின்படியேயும் ஞானமாய் தமது வார்த்
தை போதிக்கப்பட அருளுகிறார். ஆதலால் கர்த்தர் நியாயம் மற்றும் சத்தியத்
தின்படியே ஞானமாய் ஆலோசனை வழங்குகிறதை நாம் பார்க்கிறோம்.”2*

|v22

*தேவனின் ஒரு ஊழியக்காரனிடமிருந்து அந்த செய்தியை நான் படித்தபோது,
இன்றைய எனது கடமை எனக்குத் தெளிவானது. அவரது பிள்ளைகளுக்கு தே
வன் செய்திகளையும் அதிகாரம்பெற்ற தூதுவர்களையும் அனுப்புகிறார். தேவ
னிலும் அவரது ஊழியக்காரர்களிடமும் போதுமான நம்பிக்கையை நான் வள
ர்க்கிறேன், அவை சென்று அவரது ஆலோசனைக்கு கீழ்ப்படியும். அவர் நம்
மை நேசிப்பதாலும் நமது சந்தோஷத்தை அவர் விரும்புகிறதாலும் அதை அவ
ர் வேண்டுகிறார். அவரின்மீதுள்ள நம்பிக்கை குறையும்போது அது துக்கத்தை
க் கொண்டுவருகிறதென அவருக்குத் தெரியும்.*

|v23

*உலகத்தோற்றத்திற்கு முன்பே பரலோகப் பிதாவின் பிள்ளைகளுக்கு அந்த நம்
பிக்கை குறைவு துக்கத்தைக் கொண்டுவந்தது. நமது பரலோகப் பிதாவாலும்
அவரது மூத்த மகனான யேகோவாவாலும் சமர்ப்பிக்கப்பட்ட நமது அநித்திய*

*வாழ்க்கைக்கான திட்டத்தை அநித்திய உலகத்திற்கு முன்பே அநேக நமது சகோதர சகோதரிகள் மறுத்தார்களென்பதை தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித் மூலமாக தேவன் வெளிப்படுத்தினார் என நாம் அறிவோம்.3*

|v24

*அந்த எதிர்ப்பிற்காக பொல்லாங்கனின் பயங்கர தூண்டுதலின் வெற்றிக்கான எல்லா காரணங்களையும் நாம் அறியோம். ஆயினும் ஒரு காரணம் தெளிவாயிருக்கிறது. நித்திய துன்பத்தை தவிர்த்திருக்க அநித்தியத்திற்குள் வருவதன் ஆசீர்வாதத்தை இழந்தவர்கள் தேவனில் குறைவான நம்பிக்கையை வைத்திருந்தார்கள்.*

|v25

*தேவனில் நம்பிக்கைக் குறைவின் சோகமான மாதிரி சிருஷ்டிப்பிலிருந்தே இருந்துவந்தது. அவரை நம்புவதற்கான, அவர்மீது அவர்களின் போதுமான விசுவாசக் குறைவுக்கான காரணங்கள் அனைத்தும் எனக்குத் தெரியாததால் தேவனின் பிள்ளைகள் வாழ்க்கையிலிருந்து உதாரணங்களைக் கொடுப்பதில் நான் கவனமாயிருக்கிறேன்.*

|v26

*உதாரணமாக, நினேவாவுக்குப் போகும்படி கர்த்தரிடமிருந்து வந்த செய்தியை யோனா உதாசீனப்படுத்தியது மாத்திரமல்ல அவன் வேறு வழியில் சென்றான். அவனது தகுதிக்குக் கீழே இருக்கிற எளிய வேலையாக இருக்கிறதென அவன் நினைத்து, அவனது குஷ்டரோகத்தை கர்த்தர் குணமாக்க ஒரு நதியில் முழுகும்படி கர்த்தரின் தீர்க்கதரிசியால் கொடுக்கப்பட்ட வழிகாட்டுதலை நாமானால் நம்பமுடியவில்லை.*

|v27

*ஒரு படகின் பாதுகாப்பைவிட்டு, தண்ணீரின்மேல் நடந்து தன்னிடம் வரும்படி பேதுருவை இரட்சகர் அழைத்தார். அவனது வேதனையை  நாம் உணருகிறோம், இந்த நிகழ்வை நாம் கேட்கும்போது தேவனின்மீதுள்ள அதிக நம்பிக்கைக்காக நமது சொந்த தேவைகளை நாம் பார்க்கிறோம்.*

|v28

*“இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்.*

|v29

*“அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேச*

*ம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள்.*

|v30

*“உடனே இயேசு அவர்களோடே பேசி, திடன் கொள்ளுங்கள், நான்தான் பய
ப்படாதிருங்கள் என்றார்.*

|v31

*“பேதுரு அவரை நோக்கி, ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் ந
டந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான்.*

|v32

*“அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது பேதுரு படவை விட்டிறங்கி இ
யேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான்.*

|v33

*“காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு பயந்து, அமிழ்ந்துபோகையில், ஆண்டவ
ரே என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான்.*

|v34

*“உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து, அற்பவிசுவாசியே, ஏன் ச
ந்தேகப்பட்டாய் என்றார்?”4*

|v35

*பேதுரு இரத்தசாட்சியாய் மரிக்கும்வரை அவனது வாழ்நாள் முழுவதும் அவர
து சேவையில் உண்மையாயிருக்கப் போதுமான அளவு அவன் கர்த்தரை நம்பி
ய உண்மையிலிருந்து நாம் துணிவைப் பெறலாம்.*

|v36

*அவரது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைப்பதை
அதிகரிக்க மார்மன் புத்தகத்தில் இளைய நெப்பி நம்மை ஊக்குவிக்கிறான். ந
மது இருதயங்களில் உறுதியாகவும் கண்டிப்பாகவும் உணர வேண்டுமென நம்
பிக்கையின் இந்த வார்த்தைகளை நெப்பி சொன்னபோது அபாயத்தையும் சா
த்தியமான மரணத்தையும் அவன் எதிர்கொண்டான்: “நான் போய் கர்த்தர் க
ட்டளையிட்ட காரியங்களைச் செய்வேன். ஏனெனில் மனுபுத்திரருக்கு தாம்
கட்டளையிட்ட காரியத்தைச் செய்துமுடிக்கக் கூடிய ஒரு வழியை ஆயத்தப்ப
டுத்தினாலொழிய கர்த்தர் எந்தக் கட்டளைகளையும் அவர்களுக்குக் கொடுப்*

*பதில்லை என்பதை நான் அறிந்திருக்கிறேன்”.5*

|v37

*தேவனை அறிகிறதிலிருந்து அந்த நம்பிக்கை வருகிறது. சுவிசேஷத்தின் மறுஸ்தாபிதத்தின் மூலமாக பூமியிலுள்ள எந்த மக்களையும்விட நம்மிடம் மகிமையான சம்பவங்களிருக்கின்றன. “நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்”6 என்ற வார்த்தைகளை கர்த்தர் தனது பிள்ளைகளுக்குக் கொடுத்திருக்கிறார் என்ற சமாதானத்தை நாம் உணர்கிறோம். அவரை நாம் நம்பலாமென்ற அவரைப்பற்றி தேவன் வெளிப்படுத்தியதற்காக நன்றியால் எனது இருதயம் நிறைக்கப்படுகிறது.*

|v38

*நியூயார்க் மாகாணத்தில் ஒரு பண்ணையிலுள்ள மரங்களடர்ந்த ஒரு தோப்பில் ஒரு இளம் சிறுவனோடு 1820ஆம் ஆண்டு எனக்கு அது ஆரம்பமானது. ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மரங்களினூடே சிறுவனான ஜோசப் ஸ்மித் இளையவர் நடந்தார். இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தியின் மூலமாக சுத்தப்படுத்தப்படவும் இரட்சிக்கப்படவும் அவர் என்ன செய்யவேண்டுமென்பதை அறிந்துகொள்ள அவரது வேண்டுகோளுக்கு தேவன் பதிலளிப்பார் என்ற முற்றிலுமான நம்பிக்கையில் ஜெபிப்பதற்கு அவர் முழங்கால்படியிட்டார்.7*

|v39

*அவரது வார்த்தைகளை ஒவ்வொரு முறையும் நான் படிக்கும்போது தேவனிலும் அவரது ஊழியக்காரர்களிலுமுள்ள எனது நம்பிக்கை விரிவடைகிறது:*

|v40

*“சூரியனின் பிரகாசத்திற்கும் மேலான ஒரு ஒளியின் தூணை எனது தலைக்கு மேலே நான் பார்த்தேன். அது என் மேல் விழும்வரை மெதுவாக என்மீது படர்ந்தது.*

|v41

*“அது தோன்றிய உடனேயே, என்னைப் பிடித்து வைத்திருந்த எதிரியிடமிருந்து நான் விடுதலையானதை நான் கண்டேன். ஒளி என்மீது விழுந்தபோது, இரண்டு பிரமுகர்களை நான் கண்டேன். எனக்கு மேலே காற்றில் மிதந்துகொண்டிருந்த அவர்களின் பிரகாசமும் மகிமையும் எல்லா விளக்கத்திற்கும் அப்பாற்பட்டதாயிருந்தது. அவர்களில் ஒருவர் என்னைப் பெயர் சொல்லி அழைத்து என்னோடு பேசி மற்றவரைச் சுட்டிக்காட்டி சொன்னார், இவர் என் நேசகுமாரன். அவருக்குச் செவிகொடு!”8*

|v42

அவர் ஜீவிக்கிறாரென்றும், இயேசு கிறிஸ்து அவரது நேச குமாரனென்றும், அவரது பிள்ளைகளான நம்மை இரட்சிக்க அந்த குமாரனை அனுப்புமளவிற்கு நம்மை அவர் நேசிக்கிறாரென்றும் பிதா நமக்கு வெளிப்படுத்தினார். அந்த கல்வி அறிவில்லாத சிறுவனை ஒரு அப்போஸ்தலராகவும் தீர்க்கதரிசியாகவும் அவர் அழைத்தார் என்ற ஒரு சாட்சி எனக்கிருப்பதால், இன்றைய அவரது அப்போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளையும் தேவனுக்கு சேவை செய்ய அவர்கள் அழைக்கிறவர்களையும் நான் நம்புகிறேன்.

|v43

அந்த நம்பிக்கை எனது வாழ்வையும் எனது குடும்பத்தினர் வாழ்வையும் ஆசீர்வதித்திருக்கிறது. இதைப்போன்றே ஒரு ஞாயிற்றுக் கிழமையில் ஒரு மாநாட்டில் தலைவர் எஸ்றா டாப்ட் பென்சன் பேசியதை பல ஆண்டுகளுக்கு முன் நான் கேட்டிருக்கிறேன். கடனிலிருந்து விடுபடவும், தள்ளி நிற்கவும் நம்மால் முடிந்த அனைத்தையும் செய்யவேண்டுமென்று அவர் நமக்கு ஆலோசனையளித்தார். வீடுகளை அடகு வைப்பதைப்பற்றி அவர் குறிப்பிட்டார். அது சாத்தியமாகாதிருக்கலாம், ஆனால் நாம் அடகுக் கடன்கள் அனைத்தையும் செலுத்தினால் அது சிறப்பாயிருக்குமென்று அவர் சொன்னார்.9

|v44

“அதைச் செய்ய எதாவது வழியிருக்கிறதென நீ நினைக்கிறாயா?” என கூட்டத்திற்குப்பின் நான் எனது மனைவியிடம் கேட்டேன். முதலில் எங்களால் முடியவில்லை. அதன்பின்னர் மாலையில் மற்றொரு மாநிலத்தில் நாங்கள் வாங்கியிருந்த ஒரு சொத்தைப்பற்றி நான் நினைத்தேன். பல ஆண்டுகளாக அதை விற்க நாங்கள் முயன்று தோற்றுப்போனோம்.

|v45

ஆனால், தேவனையும் அவரது ஊழியக்காரர்களின் செய்திகளுக்கு மத்தியில் ஒரு சில வார்த்தைகளையும் நாங்கள் நம்பியதால், எங்கள் சொத்தை விற்பதற்காக சொல்லி வைத்திருந்த ஒரு மனிதனுடன் தொலைபேசியில் நாங்கள் பேசினோம். சில வாரங்களுக்கு முன் நான் அவரோடு பேசியிருந்தேன். அப்போது அவர் சொன்னார், “பல ஆண்டுகளாக யாரும் உங்கள் சொத்தை வாங்க முன்வரவில்லை.”

|v46

ஆனால் மாநாட்டிற்குப் பின்னர் திங்கட்கிழமையில், தேவன்மீதும் அவரது ஊழியக்காரர்கள்மீதும் எனக்குள்ள நம்பிக்கையைப் பலப்படுத்திய ஒரு பதிலை நான் கேட்டேன்.

|v47

*“உங்கள் தொலைபேசி அழைப்பைக் கேட்டு நான் வியப்புறுகிறேன். உங்கள் சொத்தை வாங்கத் தயாராக இருப்பதாக ஒருவர் என்னிடம் கூறினார்” என தொலைபேசியில் பேசிய அந்த மனிதர் சொன்னார். “எவ்வளவு கொடுப்பதா க அவர் சொன்னார்?” என நான் வியப்பில் கேட்டேன். எங்கள் அடகுப்பணத் தைவிட ஒரு சில டாலர்கள் கூடுதலான தொகையாக அது இருந்தது.*

|v48

*அது தற்செயலாக நடந்ததென ஒருவர் கூறலாம். ஆனால் எங்கள் அடகுப்பண ம் செலுத்தப்பட்டது. தேவன் நம்மிடம் விரும்புகிற பாதுகாப்பையும் சமாதா னத்தையும் காண நாம் என்ன செய்ய வேண்டுமென்பதைக் கூற அனுப்பப்பட் ட ஒரு தீர்க்கதரிசியின் செய்தியில் உள்ள எந்த வார்த்தைக்கும் எங்கள் குடும்ப ம் இன்னமும் ஆயத்தமாயிருக்கிறது.*

|v49

*தேவன்மீதுள்ள அத்தகைய நம்பிக்கை சமுதாயங்களையும் அப்படியே குடும்ப ங்களையும் ஆசீர்வதிக்கலாம். நியூ ஜெர்சியிலுள்ள ஒரு சிறிய நகரத்தில் நான் வளர்ந்துவந்தேன். சபையின் எங்கள் கிளைக்கு 20 அங்கத்தினர்களுக்கும் குறை வானவர்களே ஒழுங்காக வந்து கொண்டிருந்தனர்.*

|v50

*அவர்களுக்கு மத்தியில் சபைக்கு மனமாறிய ஒரு தாழ்மையான வயதான பெ ண் ஒருவரிருந்தார். நார்வே மொழியின் உச்சரிப்பில் பேசிய அவர் ஒரு குடி யேறியவர். அவரது குடும்பத்தில் அவர் ஒருவரே சபை அங்கத்தினராயிருந்தார் . அவர் வாழ்ந்த நகரத்தில் அவர் ஒருவரே சபை அங்கத்தினர்.*

|v51

*கிளைத் தலைவராயிருந்த அவரது தகப்பன் மூலமாக, கிளை ஒத்தாசைச் சங்கத் தலைவராக கர்த்தர் அவரை அழைத்தார். என்ன செய்யவேண்டுமென அவ ளுக்குத் தெரிவிக்க அவரிடம் கையேடு ஒன்றில்லை. அவருக்கு பக்கத்தில் ச பையின் அங்கத்தினர் யாரும் வசிக்கவில்லை. தேவையிலிருப்பவர்களை கர்த்த ர் கவனித்துக் கொள்வார் என்பதையும், ஒத்தாசை சங்க முத்திரையான “அன்பு ஒருக்காலும் ஒழியாது” என்பதையும் மட்டுமே அவர் அறிந்திருந்தார்.*

|v52

*பொருளாதார சரிவு என நாம் அழைக்கிற காலமாய் அது இருந்தது. ஆயிரக்க ணக்கான மக்கள் வேலைகளையும் வீடுகளையும் இழந்திருந்தனர். கர்த்தரிடமி ருந்து அவருக்கு கடமையிருக்கிறதென்பதை உணர்ந்து பழைய துணிகளை பக் கத்து வீடுகளில் அவர் கேட்டார். ஆடைகளை அவள் துவைத்து இஸ்திரி போ*

*ட்டு அட்டைப் பெட்டிகளில் அதைப்போட்டு தனது முதுகுப் பையில் போட்டு வைத்தார். பணமில்லாமல் ஆடைகள் தேவையாயிருக்கிற ஆண்கள் உதவிக்காக பக்கத்துவீட்டுக்காரர்களைக் கேட்கும்போது, "தெரு ஓரத்திலுள்ள வீட்டிற்குப் போங்கள். அங்கே மார்மன் பெண் ஒருவர் வசிக்கிறார். உங்களுக்கு எது தேவையோ அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார்" என அவர்கள் சொல்வார்கள்.*

|v53

*நகரத்தை கர்த்தர் பராமரிக்கவில்லை, ஆனால் அதன் ஒரு பகுதியை அவர் நன்றாகப் பராமரித்தார். அவர் என்ன செய்யவேண்டுமென தேவன் விரும்பியதைச் செய்ய கண்டுபிடிக்கவும் பின்னர் அதைச் செய்யவும் அவரை போதுமான அளவிற்கு நம்பிய ஒரு சிறிய பெண்ணை தனியாக அவர் அழைத்தார். கர்த்தர் மீதுள்ள நம்பிக்கையால் தேவையிலிருந்த ஆயிரக்கணக்கான பரலோகப் பிதாவின் பிள்ளைகளுக்குதவ அவளால் முடிந்தது.*

|v54

*தேவனில் அப்படிப்பட்ட அதே நம்பிக்கை தேசங்களை ஆசீர்வதிக்கும். 'இதோ கர்த்தர் சகல தேசங்களுக்கும் தேவையென்று தாம் பொருத்தமாய் காண்கிறயாவையும் அவர்களுடைய சொந்த தேசத்தின்படியேயும், பாஷையின்படியேயும் ஞானமாய் தமது வார்த்தை போதிக்கப்பட அருளுகிறார்."10 என்ற ஆல்மாவின் வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற நாம் தேவனில் நம்பிக்கை கொள்ளலாம் என்பதை நான் அறிந்திருக்கிறேன்.*

|v55

*தேசங்களை தேவன் ஆளுவதில்லை ஆனால் அவைகளைப்பற்றி அவர் அக்கறைப்படுகிறவராய் இருக்கிறார். மக்களுக்கு எது நல்லதென்பதை விரும்புகிற, கர்த்தர்மீது நம்பிக்கை வைத்திருக்கிற செல்வாக்கின் ஸ்தானத்திலுள்ள மக்களை அவரால் நியமிக்கமுடியும் அவர் நியமிப்பார்.11*

|v56

*உலக முழுவதிலும் எனது பயணத்தில் அதை நான் பார்த்திருக்கிறேன். 10 மில்லியன் மக்களுக்கும் கூடுதலாக இருந்த ஒரு நகரத்தில் மாநாட்டில் ஆயிரக்கணக்காக கூடியிருந்த பிற்காலப் பரிசுத்தவான்களிடம் நான் பேசினேன். அது ஒரு பெரிய விளையாட்டரங்கில் நடந்தது.*

|v57

*கூட்டம் ஆரம்பிக்கும் முன் முதல் வரிசையில் ஒரு அழகான வாலிபன் அமர்ந்திருந்ததை நான் கவனித்தேன். அவர்களைச் சுற்றியிருந்தவர்களைவிட நன்றாக உடை அணிந்திருந்து, அவரைப்போலவே நன்றாக உடை அணிந்திருந்தவர்க*

*ளால் அவர் சூழப்பட்டிருந்தார். அந்த மனிதர்கள் யார் என்று, என் பக்கத்தில் அமர்ந்திருந்த, சபையின் பொது அதிகாரியிடம் நான் கேட்டேன். அவர் நகரத்தின் மேயர் என்றும் அவர்கள் அவரது சிப்பந்திகள் எனவும் அவர் மெதுவாகச் சொன்னார்.*

|v58

*கூட்டத்திற்குப்பின் எனது காரை நோக்கி நான் நடந்து சென்றபோது, என்னை வாழ்த்த அவரது சிப்பந்திகளால் சூழப்பட்டிருந்த மேயர் காத்துக் கொண்டிருந்ததைக் கண்டு நான் வியப்புற்றேன். அவர் முன் வந்து தனது கைகளை என்பக்கம் நீட்டி சொன்னார், "எங்கள் நகரத்திற்கும் எங்கள் நாட்டிற்கும் வந்ததற்காக நான் உங்களுக்கு நன்றி சொல்கிறேன். எங்கள் மக்களை வளர்க்க நீங்கள் செய்பவைகளுக்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். எங்கள் மக்களுக்கு வேண்டிய சமாதானத்தையும் செழிப்பையும் இத்தகைய மக்களைக் கொண்டும், இத்தகைய குடும்பங்களைக்கொண்டும் எங்களால் உருவாக்கமுடியும்.''*

|v59

*அவரது பிள்ளைகளுக்கு மத்தியில் இருதயத்தில் நேர்மையானவர்களை தேவன் பதவியில் வைத்திருப்பதில் இவர் ஒருவர் என்பதை அந்த கணநேரத்தில் நான் பார்த்தேன். அந்த பெரிய நகரத்தின், நாட்டின் குடிமக்களுக்கு மத்தியில் நாம் ஒரு சிறிய கூட்டமே. நமது கோட்பாட்டில் கொஞ்சமும், நமது மக்களில் சிலரையும் மேயருக்குத் தெரியும். இருந்தும், தேவனை நம்ப, உடன்படிக்கையின், அவரது அதிகாரம்பெற்ற ஊழியக்காரர்களின் கீழ் பிற்காலப் பரிசுத்தவான்கள் அவரது மக்களுக்கு ஒளியாக மாறுவார்கள் என்ற செய்தியுடன் தேவன் அவரை அனுப்பினார்.*

|v60

*இந்த மாநாட்டின்போது உங்களிடத்தில் பேசுகிறவர்கள் தேவனின் ஊழியக்காரர்கள் என நான் அறிவேன். அவரது பிள்ளைகளுக்கு செய்திகளைக் கொடுக்க அவர்கள் தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப்பற்றி கர்த்தர் சொன்னார்: "கர்த்தர் பேசியதிலிருந்து அவர் மாறுவதில்லை. வானமும் பூமியும் கடந்துபோனாலும் அவரது வார்த்தைகள் கடந்துபோவதில்லை, அவைகள் நிறைவேறும். அது அவரது சொந்த குரலிலோ அல்லது அவரது ஊழியக்காரர்களின் குரலிலோ சொல்லப்பட்டாலும், அது ஒன்றே என அவர் சொன்னார்.12*

|v61

*கற்றுக்கொள்ளும், மனந்திரும்பும் நோக்கத்தில் நீங்கள் கேட்கும்போது, அவரில் உங்கள் நம்பிக்கையை நீங்கள் காட்டுகிறீர்கள், பின்னர் அவர் கேட்கும் எதையும் நீங்கள் போய் செய்யலாம். இந்த மாநாட்டின் ஒவ்வொரு பிரசங்கத்திலும், பாடலிலும், ஜெபத்திலும் அவரது செய்திக்காக போதுமான அளவிற்கு நீங்*

*கள் கேட்டால் நீங்கள் அதைக் கண்டடைவீர்கள். பின்னர் அவர் செய்யவேண்டுமென விரும்புகிற காரியத்தை நீங்கள் போய்ச் செய்தால் அவரை நம்புகிறதற்கான வல்லமை கூடும். ஒரு சமயத்தில் அவர் உங்களை நம்புவார் என்பதைக் காண நன்றியுடன் நீங்கள் வியப்புறுவீர்கள்.*

|v62

*பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபையில் அவரது தெரிந்தெடுக்கப்பட்ட ஊழியக்காரார்கள் மூலமாய் இன்று தேவன் பேசுகிறார் என நான் சாட்சியளிக்கிறேன். தாமஸ் எஸ். மான்சன் தேவனின் தீர்க்கதரிசி. நமது பரலோகப் பிதாவும் அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் ஜீவித்து, நம்மை நேசிக்கிறார்கள். ஆகவே இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் சாட்சியளிக்கிறேன், ஆமென்.*

|v63

*குறிப்புகள்*

|v64

1.

|v65

*ஆல்மா 29:1--3*

|v66

2.

|v67

*ஆல்மா 29:8*

|v68

3.

|v69

*கோட்பாடும் உடன்படிக்கைகளும் 29:36--37; ஆபிரகாம் 3:27--28 பார்க்கவும்*

|v70

4.

|v71

*மத்தேயு 14:25--31*

|v72

5.

|v73

*1நெப்பி 3:7*

|v74

6.

|v75

*சங்கீதம் 46:10*

|v76

7.

|v77

See *Teachings of Presidents of the Church: Joseph Smith* (2007), 28.

|v78

8.

|v79

Joseph Smith—History 1:16–17.

|v80

9.

|v81

See, for example, Ezra Taft Benson, “Prepare for the Days of Tribulation,” *Ensign*, Nov. 1980, 33.

|v82

10.

|v83

*ஆல்மா 29:8*

|v84

11.

|v85

*2 நாளாகமம் 36:22--23; எஸ்றா 1:1--3; ஏசாயா 45:1, 13 பார்க்கவும்.*

|v86

12.

|v87

*கோட்பாடும் உடன்படிக்கைகளும் 1:38*

|v88

*லியஹோனா*

|v89

November 2010